# சங்கரன்கோவில் நகராட்சி

**2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30.04.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு சாதாரணக்கூட்டம்**

பொருள் எண் – 934

சங்கரன்கோவில் நகராட்சி 2020-2021ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புநிதியின் கீழ் தேர்வு செய்து வழங்கப்பட்டுள்ள பழுதடைந்த சாலைகள் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோவில்,கல்விநிலையம்,மருத்துவமனைகள் செல்லும் சாலைகள் மற்றும் முக்கிய பிரதான சாலைகளை இணைக்கும் இணைப்பு சாலைகளாகவும் பேருந்துசெல்லும் சாலைகளாகவும் உள்ளது. மேலும் மேற்கண்டசாலைகள் பழுதுடைந்துள்ளதை சரிசெய்ய பொதுமக்களிடம் இருந்து ஏராளமான கோரிக்கைகள் பெறப்பட்டும் மற்றும் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் நிதிநிலைசீராக இல்லாததால் சாலைமேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. ஏனவே மற்கண்டவாறு பழுதடைந்த சாலைகள் மேம்பாடு செய்ய நகராட்சி நிதிநிலை கருத்தில் கொண்டு முழு மானியத் தொகைஅனுமதித்துவழங்கவிரிவானபிரேரணைதயார் செய்துஅனுப்பஉத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2020-2021 ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புறசாலை உட்கட்டமைப்புநிதியின் கீழ் கீழ்க்கண்டசாலைகளைமேம்படுத்தவும். அதற்காகதயார் செய்யப்பட்டமதிப்பீட்டிற்கும் மன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | தார் சாலையின் நீளம் "கி.மீ " | தார் சாலையின் அகலம் "மீட்டரில்" | மதிப்பீட்டுத்தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ரயில்வேபீடர் சாலைமற்றும் மேலரதவீதி தார்தளம் அமைத்தல் | 1.77 | 8.15 | 150.00 |
| 2 | கழுகுமலைசாலை( டைவர்சன் ரோடு) மீரான் சேட் காலனிபி.எஸ் நகர் கக்கன் நகரில் தார்தளம் அமைத்தல் | 2.16 | 5.60 | 150.00 |
| 3 | இலவன்குளம் சாலைகோமதியாபுரம் புது 1ம் தெருபாரதியார் 8ம் தெருமற்றும் பாரதியார் 5ம் தெருவில் தார்தளம் அமைத்தல் | 1.760 | 6.50 | 150.00 |
| 4 | வடகாசியம்மன்கோவில் 1 மற்றும் 2ம்தெரு கீழச்செக்கடித் தெருதேனப்பபுரம் 1 மற்றும் 2ம் தெருகாந்திநகர் (பள்ளிசாலை) லெட்சுமியாபுரம் 5ம் தெருதிருவிக் தெருகாமராஜ் நகர் காமராஜ் நகர் முதல் கழிப்பிடம் வரைதார்தளம் அமைத்தல் | 2.410 | 5.50 | 160.00 |
| 5 | காவேரிநகர் ( பள்ளிசாலை) மற்றும் வி.ஐ.பி நகாதார்தளம் அமைத்தல் | 1.85 | 6.90 | 150.00 |
| 6 | பாரதியார் 4ம் தெரு தீப்பச்சிஅம்மன் நகர் லெட்சுமியாபுரம் 7ம் தெருகீழ் பகுதி திருவேங்கடம் சாலை குறுக்குத் தெரூவுயில் தார்தளம் அமைத்தல் | 1.250 | 4.30 | 140.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | ரயில்வேபீடர் சாலைகுறுக்குச் சாலை சேர்ந்தமரம் சாலை மற்றும் முல்லைநகர் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல் | 1.740 | 5.60 | 155.00 |
| 8 | திருவள்ளுவர் சாலை மற்றும் கக்கன் நகர் குறுக்குத் தெருவில் தார்தளம் அமைத்தல் | 1.750 | 6.40 | 140.00 |
| 9 | சேர்ந்தமரம் குறுக்குதெருதார்தளம் மற்றும் பாரதியார் 1 2 மற்றும் 3ம் தெருகோமதியாபுரம் 1ம் தெருமுதல் 7ம் தெருவரைகாந்திநகர் கீழ 5ம் தெருகக்கன் நகர் 1 5ம் தெருமற்றும் வடகாசியம்மன்கோவில் 2ம் குறுக்குதெரு பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 2.35 | 5.40 | 160.00 |
| 10 | ராஜபாளையம் மெயின் சாலைசபாபதிநகர் முதல் ரயில்வேபீடர் சாலைவரைமழைநீர் வடிகால் அமைத்தல் சங்குபுரம் 4 மற்றும் 5ம தெருமற்றும் ஒடைத் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 0.80 | 7.10 | 147.00 |
| | **மொத்தம்** | **17.84** | | **1502.00** |

மேற்கண்ட பழுதடைந்த சாலைகளை ரூ.1502.00/-லட்சம மதீப்பீட்டில் 2020-2021-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைஉட்கட்டமைப்புநிதிஅல்லதுவேறுஏதேனும் திட்டத்தின் கீழ் அரசின் முழு மானயத்தின் கீழ் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேனைண அனுப்ப மன்றம் அனுமதிக்கு.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 935

தமிழக அரசின் உத்தரவின்படியும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி ஆகியோர் அறிவுறுத்தலின்படி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த 24.03.2020 முதல் 14.04.2020 வரை மத்திய மற்றும் மாநில அரசு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு உத்திரவு பிறப்பித்துள்ளது குறித்து பொதுமக்கள் வெளியில் தேவையின்றி செல்வதை தவிர்க்கவும், நோய் பரவும் விதம் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்த தகவல்களை தெரிவித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சிக்குச் சொந்தமான 6 ஆட்டோக்களிலும் Amplifier வசதி இல்லை எனவும், எதிர்காலத்தில் திடக்கழிவு, டெங்கு போன்ற பணிகளையும் தற்போது கொரோனா விழிப்புணர்வு பணிக்காகவும் அனைத்து ஆட்டோக்களிலும் Amplifier வசதியினை ஏற்படுத்திடவும், மேலும் தினசரி வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வந்தவர்கள் குறித்த விபரம் சேகரிக்கப்பட்டு அவர்களது வீடுகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் Bleaching Powder கொண்டு 1 சதவீதம் Sodium Hypochlorite solution மற்றும் lysol கரைசலை கொண்டு கைதெளிப்பான் இயந்திர தெளிப்பான், தீயணைப்பு வாகனம் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. அணைத்து துப்புரவு பணியாளர்கள், Animator, நகராட்சி பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கவும், தொடர்ந்து கிருமிநாசினிகள் தேவைப்படுவதால் போதுமான அளவு பாதுகாப்பு உபகாரணம் மற்றும் கிறுமிநாசினிகன் போதியளவு இருப்பு இல்லாததால் பொருள்கள் வாங்க துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் தனது 01.04.2020 தேதியின் அறிக்கையில் தெரிவித்துள்ளர்கள். எனவே மேற்கண்ட விபரப்படி பொருட்கள்வாங்க உத்தேச செலவின தொகை ரூ10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

பொதுசுகாதாரஅவசர அவசியம் கருதி மேற்கண்ட பொருட்கள் பேரிடர் மேலாண்மை பிரிவு 16 (a) ன் கிழ் 74/Js (MA)/Finance (salaries)2020dt-01.04.2020 ன் படி பணிகள் மேற்கொள்ளவும் விலைபுள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி பணிகள் மேற்கொள்ளவும் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 936

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 79C6847 (FC) வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தின்பழுது வேலைகள் செய்வதற்கு 31.03.2020 ந் தேதியில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ்<br>3/514, தென்காசி | ரூ.47910/– |
| 2 | மூஸா மோட்டடார்ஸ் ஒர்க்ஸ்<br>தென்காசி. | ரூ.51000/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின்வரிசை எண்1.ல் உள்ள ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக கொடுத்துள்ளார். எனவே 08.03.2020–ல் தகுதிச்சான்று முடிவடைவதாலும். பொதுசுகாதார அவசியம் கருதியும், வாகனத்தின் பழுதுவேலைகள் செய்யவேண்டிருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள. ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி மன்ற அனுமதிக்காக. (ந.க.எண்–509/2020/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 937

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 79C6834 (FC) வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தின்பழுது வேலைகள் செய்வதற்கு 31.03.2020 ந் தேதியில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1. 1 | ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ்<br>3/514, தென்காசி. | ரூ.47910/– |
| 2. 2 | ஸ்ரீ.மூஸா மோட்டடார்ஸ் ஒர்க்ஸ்<br>தென்காசி. | ரூ.51000/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின்வரிசை எண்1.ல் உள்ள ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக கொடுத்துள்ளார். எனவே 08.03.2020–ல் தகுதிச்சான்று முடிவடைவதாலும். பொதுசுகாதார அவசியம் கருதியும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள. ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி மன்ற அனுமதிக்காக (ந.க.எண்–508/2020/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 938

2018-2019ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரும் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினருமான (திருமதி வி.எம்.இராஜலெட்சுமி) சங்கரன்கோவில் நகராட்சி கிருஷ்ணசாமி நகர் கக்கன் நகர் பள்ளியில் அங்கன்வாடி அமைக்கும் பணி ரூ 10.00லட்சத்தில் மேற்கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: அ8/6034/2018 நாள்: 04.03.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 27.03.2020ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு கே.நிஸார்<br>ஒப்பந்தக்காரர் | ரூ 10,00,000 | மதிப்பீட்டுத்தொகைகுச்சமம் | |
| 2. | திரு கே.ராஜாமுகம்மது<br>ஒப்பந்தக்காரர் | ரூ 10,00,000 | 10.93% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு கே.நிஸார் என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்குச்சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு கே.நிஸார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 939

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.எம்.போத்தி என்பவர் கீழ்க்கண்ட பணிக்கு 1 % முன் வைப்புத்தொகை மற்றும் 1 % வைப்புத்தொகை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி வைப்புத்தொகை திரும்ப வழங்க பொறியாளர் அறிக்கை செய்துள்ளார். ஒப்பந்தக்காரர் திரு எம்.போத்தி என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு 2012-13ம் வருடத்தில் பதிவேடு II ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1% முன் வைப்புத்தொகை மற்றும் 1% வைப்புத்தொகை ரூ.150981/-திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

| | **வேலையின் பெயர்** | 1 % முன் வைப்புத் தொகை ரூ | 1 % வைப்புத் தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | காந்தி நகர் 1 2ம் தெருக்களில் பகிர்மானக்குழாய் பதித்தல் | 650 | 650 |
| 2. | காமராஜ் நகர் மேல்பகுதி மற்றும் கீழ்பகுதி கழிப்பறைகளில் பராமரிப்பு மற்றும் தண்ணீர் வசதி செய்யம் பணி | 1750 | 1750 |
| 3 | வாரசந்சந்தை தெருவிலுள்ள மாட்டுத்தொழுவ வளாகத்தில் Bio Sherder machine அமைத்தல் மற்றும் AC Sheet roofing வசதி செய்யும் பணி | 2500 | 2500 |
| 4 | வாணியர் ஊரணி கழிவறையில் தண்ணீர் வசதி செய்யம் பணி | 900 | 900 |
| 5 | காந்தி நகர் தென்பகுதி சுகாதார வளாகத்தில் குளியல் தொட்டி மற்றும் Anti Skid Tiles பதித்தல் பணி | 1300 | 1300 |

| | | | |
|---|---|---|---|
| 6 | நகராட்சி பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் குழந்தைகள் பாலூட்டும் அறை கட்டுதல் | 0 | 3700 |
| 7 | காந்தி நகர் 2ம் தெரு கீழ்பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் | 9100 | 9100 |
| 8 | காந்தி நகர் 3ம் தெரு ஆழ்துளைக்கிணற்றில் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் வசதி பணி | 1600 | 1600 |
| 9 | வாரச்சந்தை தெருவிலுள்ள நகராட்சி வளாகத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் கூரை அமைத்தல் | 5000 | 5000 |
| 10 | காந்தி நகர் 1ம் தெருவில் பேவர் பிளாக் பதித்தல் பணி | 10000 | 10000 |
| 11 | காந்தி நகர் 1ம் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3800 | 4064 |
| 12 | காந்தி நகர் 1ம் தெரு கீழ் பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் | 0 | 10680 |
| 13 | காந்தி நகர் தென்பகுதியில் உள்ள கழிபிபடம் பராமரிப்பு மற்றம் தண்ணீர் வசதி செய்யும் பணி | 3700 | 3977 |
| 14 | திரு விக தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 0 | 2670 |
| 15 | லெட்சுமியாபுரம் 1 2 தெருக்கிளல் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல் | 0 | 700 |
| 16 | T.V. சாலை பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைத்தல் | 650 | 650 |
| 17 | காந்தி நகர் கீழ 4ம் தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதித்தல் | 750 | 750 |
| 18 | தேனப்பபுரம் முதல் தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி | 0 | 350 |
| 19 | கக்கன் நகர் 6ம் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 6500 | 6500 |
| 20 | காந்தி நகர் தென்பகுதி சுகாதார வளாகம் குடிநீர் பணிகள் | 1500 | 1500 |
| 21 | காந்தி நகர் 1ம் தெருமுதல் 3வது தெரு வரை பேவர் பிளாக் பதித்தல் பணி | 4800 | 4800 |
| 22 | காந்தி நகர் 1ம் தெருவில் பேவர் பிளாக் பதித்தல் பணி | 9500 | 10440 |
| 23 | காந்தி நகர் 1 2 3 கீழ்பகுதி தெருக்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி | 500 | 500 |
| 24 | காமராஜ் நகர் 1 2 3 4 5 தெருக்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி | 800 | 800 |
| 25 | காந்தி நகர் 1 தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி | 400 | 400 |
| | **மொத்தம்** | **65700** | **85281** |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் –940

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு **கே.நிஜார்** என்பவர் கீழ்க்கண்ட பணிக்கு 1 % வைப்புத்தொகை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி வைப்புத்தொகை திரும்ப வழங்க பொறியாளர் அறிக்கை செய்துள்ளார். ஒப்பந்தக்காரர் திரு கே.நிஜார் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு 2012-13ம் வருடத்தில் பதிவேடு

II ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1 % வைப்புத்தொகை ரூ10000/- திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

| | வேலையின் பெயர் | 1 % வைப்புத்தொகை ரூ |
|---|---|---|
| 1. | அருந்ததியர் காலனியில் சமுதாய கூடம் கட்டுதல் | 10000 |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 941

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு **ஏ.முகமதுஜலீல்** என்பவர் கீழ்க்கண்ட பணிக்கு 1 % வைப்புத்தொகை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி வைப்புத்தொகை திரும்ப வழங்க பொறியாளர் அறிக்கை செய்துள்ளார். ஒப்பந்தக்காரர் திரு ஏ.முகமதுஜலீல் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு 2012-13ம் வருடத்தில் பதிவேடு I மற்றும் II ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1 % வைப்புத்தொகை ரூ 25411 /-திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

| வ.எண் | வேலையின் பெயர் | 1 % வைப்புத்தொகை ரூ |
|---|---|---|
| 1. | காயிதேமில்லத 2ம் தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 500 |
| 2. | காந்தி நகர் நகராட்சிபள்ளியில் பராமரிப்பு பணி | 1400 |
| 3 | காமராஜ் நகர் மற்றும் பாட்டத்துார் பம்ப் ரூம் பராமரிப்பு பணி | 700 |
| 4 | திரு விக தெரு கழிப்பிடம் பராமரிப்பு | 3700 |
| 5 | மழைநீர் சேமிப்பு தொட்டி அமைத்தல் | 3800 |
| 6 | வார்டு 17 பம்ப் ரும் பராமரிப்பு பணி | 420 |
| 7 | ராமசாமியாபுரம் 2ம் தெரு பைப்லைன் விஸ்தரிப்பு பணி | 200 |
| 8 | காந்தி நகர் நகராட்சி பள்ளியில் டைல்ஸ் பராமரிப்பு பணி | 9000 |
| 9 | வார்டு எண் 12,13,17,19,20 ஆழ்துளைக்கிணறு அமைத்தல் | 4391 |
| 10 | காயிதேமில்லத் 6ம் தெருவில் போர்வெல் அமைத்தல் | 1300 |
| | **மொத்தம்** | 25411 |

பொருள் எண் – 942

சங்கரன்கோவில் நகராட்சி COVID-19 க்கு காந்திஜி நூற்றாண்டு நாளாங்காடியில் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால் மக்களின் கூட்டத்தை குறைக்கும் பொருட்டு நாளாங்காடி கடைகளை பஸ் ஸ்டாண்ட் உட்புறம் விரிவு படுத்த கடைகளுக்கு மின்சார வசதி செய்ய் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி சட்ட விதி 15ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக

அலுவலகக்குறிப்பு

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள ரூ.30000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண் – 943

சங்கரன்கோவில் நகராட்சி- பொதுசுகாதார பிரிவில் 4ல் குப்பைகளை அரைப்பதற்க்கு பயன்படுத்தப்பட்டு வந்த Bio-Shredding Machine பழுது ஏற்பட்டு Bearing மற்றும் Shredder machine உபயோக படுத்தமுடியாத சூழ்நிலை உள்ளதால் மேற்படி Machine பழுது நீக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு பி.சிவா என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள ரூ 20000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு பி.சிவா என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 944

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.பி.சிவா என்பவர் கீழ்க்கண்ட பணிக்கு 1% வைப்புத்தொகை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி வைப்புத்தொகை திரும்ப வழங்க பொறியாளர் அறிக்கை செய்துள்ளார். ஒப்பந்தக்காரர் திரு.பி.சிவா என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு 2012-13ம் வருடத்தில் பதிவேடு II ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1% வைப்புத்தொகை ரூ.33650/- திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | 1% வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கீழ செக்கடி தெரு கிருஷ்ணசாமி வீதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 2750 |
| 2. | வார்டு எண் 30 உமா சங்கர் காலணி (இரயில்வே பீடர் சாலை) விடுபட்ட பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் | 1200 |
| 3 | ஆடி தபசு திருவிழாவை ஒட்டி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 1500லிட்டர் கொள்ளளவு சின்டெக்ஸ் டேங்க் 4 எண்ணம் விநியோகம் செய்தல் | 600 |
| 4 | 30வது வார்டு இரயில்வே பீடர் ரோடு வடபகுதியியல் விடுபட்ட பகுதியில் குடிநீர் குழாய் பதித்தல் | 850 |
| 5 | வார்டு எண் 11 P.S. நகர் கிணற்றில் இருந்து புதுமனை 5ம் தெருவிற்கு குடிநீர் விநியோகம் | 450 |

| | | |
|---|---|---|
| 6 | 30வது வார்டு இரயில்வே பீடர் ரோடு பாலசுப்பிரமணியன் சாலை சந்திக்கும் இடத்தில் சிறுபாலம் அமைத்தல் | 2000 |
| 7 | திருவேங்கடம் சாலை ___ அண்ணா நகர் மேல்நிலை தொட்டியில் இருந்து அண்ணா நகர் பகுதிக்கு செல்லும் பைப்லைன் பழுது பார்த்தல் | 750 |
| 8 | டைவர்சன் சாலை திருநீலகண்டர் ஊரணி மேல்புறம் சாலை வடக்கு ரதவீதி மற்றும் அம்மன் சன்னதி சாலைகளில் சிமெண்ட் பேட்ச் வேலை | 5000 |
| 9 | லட்சுமியாபுரம் தெருவில் இருந்து திருவேங்கடம் சாலை வரை புதிதாக பகிர்மான குழாய் மற்றும் வால்வு அமைத்தல் | 900 |
| 10 | வார்டு எண்: 25 அம்மன் சன்னதி தெருவில் பம்ப்ரூம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 2000 |
| 11 | வார்டு எண்: 29 இராமசாமியாபுரம் 3வது தெருவில் ஆழ்துளைக்கிணறு அமைத்து பம்மப்ரூம் கட்டுதல் | 2100 |
| 12 | இந்நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் வால்வு தொட்டிகள் அமைத்தல் | 500 |
| 13 | வார்டு எண்: 22 உச்சினிமாகாளியம்மன் கோவில் தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 500 |
| 14 | வார்டு எண்: 7 கோமதியாபுரம் 7வது தெரு மேல் பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல் | 850 |
| 15 | காந்தி நகர் கீழ 1ம் தெருவில் கிணறு துார்வாரி தண்ணீர் வசதி செய்தல் | 2300 |
| 16 | திருநெல்வேலி சாலையில் உள்ள மயானத்தில் பம்ப்ரூம் பராமரிப்பு பணி | 600 |
| 17 | வார்டு எண்: 10 புதுமனை புது தெருவில் உள்ள சிறு மின்விசை பம்ப் மற்றம் குடிநீர் வசதி செய்தல் | 650 |
| 18 | பாட்டத்துார் நகராட்சி பள்ளியில் கழிப்பிடம் மற்றும் ஆன்டிஙகிட் டைல்ஸ் பதித்தல் பணி | 3200 |
| 19 | நாய்கள் கருத்தடை செட் கட்டும் பணி | 5000 |
| 20 | ராமசாமியாபுரம் 2ம் தெரு பைப்லைன் அமைத்தல் | 550 |
| 21 | ஆனையூர் நகராட்சி கம்போஸ்டில் முள் வேலி அமைத்தல் | 900 |
| | **மொத்தம்** | **33650** |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 945

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.முத்தையா என்பவர் கீழ்க்கண்ட பணிக்கு 1 % வைப்புத்தொகை திரும்ப வழங்க மனு கொடுத்தள்ளார். மேற்படி வைப்புத்தொகை திரும்ப வழங்க பொறியாளர் அறிக்கை செய்துள்ளார். ஒப்பந்தக்காரர் திரு எஸ்.முத்தையா என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு 2012-13ம் வருடத்தில் பதிவேடு II ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.எனவே 1 % வைப்புத்தொகை ரூ 29000/-திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | 1 % வைப்புத்தொகை ரூ |
|---|---|---|
| | | |

| | | |
|---|---|---|
| 1 | உச்சினிமாகாளியம்மன் கோவில் தெருவில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 6000 |
| 2 | திருவுடையான் சாலையில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 6000 |
| 3 | உச்சினிமாகாளியம்மன் கோவில் தெருவில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 6000 |
| 4 | திருவுடையான் சாலையில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 6000 |
| 5 | சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் லாரியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 5000 |
| | **மொத்தம்** | **29000** |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 946

சங்கரன்கோவில் நகராட்சியில் 2018-2019ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம்(Swachh Bharat Mission) திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் உரமாக்கும் மையம்(MCC) அமைத்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:22866/2018/P3 நாள்:23.08.2018 அனுமதி அளித்துள்ளது.

1. மீரான்சேட் காலனி
2. ஏ.வி.ஆர்.எம்.வி. காலனி
3. திருவேங்கடம் சாலை
4. வாரச்சந்தை தெரு

நுண்ணுயிர் உரமாக்கும் மையம்(MCC) அமைக்கும் பணிக்கு மேற்கண்ட4 ( நான்கு) இடங்களில் 3 (மூன்று) இடங்கள் மட்டும் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

மேலும் ஏ.வி.ஆர்.எம்.வி காலனியில் நுண்ணுயிர் உரமாக்கும் திட்டம் பணி செய்ய பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனால் பணி மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி இடத்தில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் கட்டப்படவில்லை.

எனவே இடத்திற்க்கு மாற்றாக நகரட்சிக்குட்பட்ட கழுகுமலை சாலையில் தென்புறமாக உள்ள காலி இடத்தில் அமைப்பதற்க்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி பணிகளை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.50.00 இட்சத்திற்கும் அதே ஒப்பந்தகாரர் மூலம் பணியினை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 947

திருவேங்கடம் சாலை நகராட்சி அலுவலகத்தில் வாகன நிறுத்தும் இடம் குடிநீர் வசதி மற்றும் அதர பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்: 675 நாள்: 28.06.2019ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 30.12.2019 ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது

| | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் | மதிப்பீட்டுத் தொகையை விட |
|---|---|---|---|

| வ.எண் | | தொகை | கூடுதல் | குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திரு ஏ.முகமதுஜலீல் ஒப்பந்தக்காரர் | ரூ 6,00,000 | மதிப்பீட்டுத்தொகைகுச்சமம் | |
| 2. | திரு பி.சிவா ஒப்பந்தக்காரர் | ரூ 6,00,000 | 4.82% | |

**மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு ஏ.முகமதுஜலீல் என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்குச்சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு ஏ.முகமதுஜலீல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் அனுமதிக்காக.**

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 948

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 18ல் காந்திநகர் கீழ 1ம் தெருவில் நடுப்பகுதி காந்திநகர் கீழ 2ம் தெரு நடுப்பகுதியில் குடிநீர் விநியோகம் சரியாக கிடைக்கவில்லை. மேலும் இப்பகுதி பொதுமக்களின் புகாரின் அடிப்படையிலும், நேரடி ஆய்வு செய்ததன் அடிப்படையில் இப்பகுதி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய புதியதாக 4”சுலிஸ்வால்வு 4 பி.வி.சி பைப் அமைக்கவேண்டியுதுள்ளதால் மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ-61,000/-க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக. ந.க.எண்:0781/2020/இ2

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 949

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 02 பாரதியார் 2ம்தெருவில் கீழ்பகுதியில் 4”சுலிஸ்வால்வு மற்றும் பைப்லைன் புதியதாக மாற்றும் செய்யும் பணிக்கு ரூ-98,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்: 831 நாள்: 07.01.2020 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 20.04.2020 ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. திரு. P.சிவா என்பவர் மதிப்பீட்டுவிலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. P.சிவா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தீன் அனுமதிக்காக **ந.க.எண்: 831 /2019/இ2**

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1 | திரு. P.சிவா | ரூ 98,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2 | திரு. S. கார்த்தீசன் | ரூ 98,000/- | 2.81% | ---- |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 950

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30ல் I இரயில்வே பீடர் ரோடு மத்தி II இரயில்வே பீடர் ரோடு மேல்பகுதி III இரயில்வே பீடர் ரோடு வடபகுதி 4”சுலிஸ்வால்வு மற்றும் பைப்லைன் புதியதாக மாற்றும் செய்யும் பணிக்கு ரூ-90,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்: நாள்: ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 20.03.2020 ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. திரு. P.சிவா என்பவர் மதிப்பீட்டுவிலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. P.சிவா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தீன் அனுமதிக்காக
**ந.க.எண்:0615/2020/இ2**

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1 | திரு. P.சிவா | ரூ 90,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2 | திரு. S. கார்த்தீசன் | ரூ 90,000/- | 2.81% | ---- |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 951

இந்நகராட்சிக்குட்பட்ட திருவேங்கடம் சாலை (மாட்டுத்தாவணி–சத்துணவு மைம்) அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண். 1,2,3 ஆகிய 3 கடைகளை நகராட்சியின் நடைமுறையிலுள்ள ஏல நிபந்தனைகளின்படியும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி கடையின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்காக விளம்பரம் செய்யும் கட்டணம் மற்ற இதர செலவினங்களுக்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2907/2017/பி2)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 952

சங்கரன்கோவில் நகராட்சி- கழுகுமலை சாலையில் உள்ள பாட்டத்துார் பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைக்கப்பட்டு பலவருடங்கள் ஆகிவிட்டபடியால் மிகவும் பழுதான நிலையில் கீழே விழக்கூடிய நிலையில் உள்ளதால் மேற்படி நிழற்குடையை அகற்ற உத்தேச செலவினம் ரூ.12000/-க்கு மேற்கொள்ளவும் மேற்படி பணியினை ஒப்படைப்பு பணியாக ஒப்பந்தக்காரர் திருஆர்.மகாலிங்கம் என்பவர் மூலமாக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள ரூ.12000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 953

இந்நகராட்சிக்குட்பட்ட இரண்டுடம்பர் பிளேசர் வாகனத்தை குடிநீர் வாகனம் மற்றும் கிவுநீர் வாகனமாக மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்: 903 நாள்: 28.02.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 07.04.2020ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | ஸ்ரீ முருகாமோட்டார் ஒர்க்ஸ் செங்கோட்டைமெயின் ரோடு. கோட்டைகுளம் | ரூ5,90,000 | மதிப்பீட்டுத்தொகைகுச்சமம் | |
| 2. | மூசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் 194 செங்கோட்டைரோடு தென்காசி. | ரூ5,90,000 | 4.12% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் ஸ்ரீ முருகாமோட்டார் ஒர்க்ஸ் என்பவர் மதிப்பீட்டுத் தொகைக்குச் சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் ஸ்ரீ முருகாமோட்டார் ஒர்க்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – **954**

**சங்கரன்கோவில் நகராட்சி- வி.ஐ.பி நகரில் சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்க்கு மிகவும் சிரமமாக உள்ளதால் தற்காலிகமாக சாலை மேம்பாடு செய்ய செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.21000/-க்கு மேற்கொள்ளவும் மேற்படி பணியினை ஒப்படைப்புபணியாக ஒப்பந்தக்காரர் திருபி.சிவா என்பவர் மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்காக.**

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். **பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள ரூ.21000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – **955**

தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை பணி நடைபெற்று வருகிறது.மேலும் தினசரி மேற்படி தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தினசரி 300 முதல் 500 கிலோ பிளீச்சிங் பவுடர் செலவாகிறது. எனவே மேற்கண்ட தடுப்புப்பணி நடவடிக்கை கருதியும் மேற்படிபணியினை மேற்கொள்ள அத்தியாவசிய பொருள்கள் வாங்குவதற்காக தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். உ4/4368/2020 நாள்.03.04.2020 –ன் படி ரூ.2,00,000/– நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதிக்கீட்டின்படியான தொகையின்படி தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 03.04.2020 அன்று ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தயிபடியும் கூடுதலாக பிளீச்சிங் பவுடர் வாங்கி பயன்படுத்த தெரிவித்த விபரப்படி இராமநாதபுரம் SMV Chemicals கம்பெனியில் விசாரித்ததில் அவர்கள் 25 கிலோ பிளீச்சிங் பவுடர் விலை ரூ.975/– With GST என தெரிவிக்கப்பட்டதாகவும், திருச்சி Tamil Nadu Multipurpose Indco serve cooperationg Society ல் **1** கிலோ பிளீச்சிங் பவுடர் விலை **63.72** கிலோ(including GST) என குறிப்புட்டு கடிதம் **31.03.2020**ல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவற்றில் SMV Chemicals விலை ரூ.**39**/–என குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி அரசு கடிதம் எண்.74/ஜே5/(MA) Finance (Salaries)2020 நாள்.**01.04.2020**ன் படி ஒப்பந்தப்புள்ளிக்கு விதிவிலக்கு அளித்துள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு துப்புரவு ஆள்வாளர் மற்றும் அலுவலரின் **04.04.2020**ந் தேதிய அறிக்கையில் தெரிவித்தள்ளார். மேற்படி அறிக்கையின்படி **5000** கிலோ பிளீச்சிங் பவுடர் வாங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக அவசர அவசியம் கருதி பொருளில் கண்ட விபரப்படி SMV Chemicals கம்பெனியில் 5000 பிளீச்சிங் பவுடர் வாங்க தொடர்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.566/2020/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 956

சங்கரன் கோவில் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக தனிமைப்படுத்தப்பட்டோர் வீடுகளில் உருவாகும் BIO Medical Waste களை தனியாக சேகதித்து அவற்றினை மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அங்கீகரித்துள்ள M/S Aseptic System BIO Medical waste Management Co,pappankulam .Tirunelveli Distict, என்ற நிறுவனத்தின் மூலம் அப்புறப்படுத்த அறிவுருத்தப்பட்டுள்ளது. (ROC NO.5437/J2/2020–14, நாள்–15.05.2020 எனவே தமிழக அரசு அறிவுரையின் பெயரில் இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் உருவாகும் முகவுறை, கையுறை, மற்றும் இதர மருத்துவ கழிவுகள் போன்ற BIO Medical Waste குப்பைகளை மேற்குறிப்பிட்ட தனியார் நிறுவனம் மூலம் அகற்றுவதற்கும் மேற்கண்ட பணியை செய்வதற்கு அந்நிறுவனம் தெரிவிக்கும் செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க. எண் –566/2020/H1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் – 957

தமிழக அரசு 1897ம் ஆண்டு தொற்று நோய் சட்டத்தின்படி கொரோனா வைரஸ் நோயை தொற்று நோயாக அறிவிப்பு செய்து மேற்கண்ட வைரஸ் நோய் பரவாமல் இருக்க பேரிடர் மேலாண்மை சட்டத்தின்கீழ் அவ்வப்போது சில நடைமுறைகளை கடைபிடிக்க விதிமுறைகளை மத்திய / மாநில அரசு உத்தரவாக வெளியிட்டு வருகிறது. அதனை பின்பற்ற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மத்திய/மாநில அரசு அறிவுறுத்தி உள்ளது. எனவே மத்திய/மாநில அரசு அவ்வப்போது தெரிவிக்கும் விதிமுறைகளை சங்கரன்கோவில் நகராட்சிப்பகுதியில் அனைத்து பொதுமக்களும் கடைபிடிக்கவும், அவ்வாறு வகுக்கப்படும் விதிமுறைகளை மீறும் பொதுமக்கள் மற்றும் அனைத்து கட்டிட உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 306(25)ன்கீழ் கீழ்க்கண்ட விபரப்படியான துணைவிதிகளை அவசர அவசியம் கருதி அனுமதித்து அதனை கடைபிடிக்காதவர்களுக்கு அபராதம் விதித்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | குற்றத்தின் விபரம் | அபராதத்தொகை |
|---|---|---|
| 1. | முகக்கவசம் அணியாமல் வரும் தனிநபருக்கு அபராதம் | ரூ.100/– |
| 2. | பொது இடங்களில் எச்சில் துப்புதல் / மலம் கழித்தல் / ஜலம் கழித்தல் | ரூ.100/– |
| 3. | சமுதாய இடைவெளியினை கடைபிடிக்காத தனிநபர் ஒருவருக்கு | ரூ.100/– |
| 4. | சமுதாய இடைவெளி கடைபிடிக்காத வர்த்தக நிறுவனங்களுக்கு | ரூ.500/– |
| 5. | அவ்வப்போது தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் தெரிவிக்கும் நடைமுறைகளை கடைபிடிக்காத | |
| i) | சிறிய வர்த்தக நிறுவனங்களுக்கு அபராதம் (0–150 ச.அடி வரை) | ரூ.1000/– முதல் ரூ.10000/– வரை அல்லது கடைகளை மூடி சீல் வைத்தல் அல்லது இரண்டும் சேர்ந்த அபராதம் |
| ii) | பெரிய வர்த்தக நிறுவனங்களுக்கு அபராதம் (150 ச.அடிக்கு மேல் ) | ரூ.10000 முதல் ரூ.100000 வரை அல்லது கடைகளை மூடி சீல் வைத்தல் அல்லது இரண்டும் சேர்ந்த அபராதம் |
| iii) | ஒவ்வொரு அரசு மற்றும் அனைத்து தனியார் வகை | ரூ.500 முதல் ரூ.10000 வரை அல்லது |

| | | |
|---|---|---|
| | கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலும் நுழைவாசலில் கை, கால்களை கழுவ சோப்பு கரைசல் மற்றும் தண்ணீர் வசதி அல்லது கிருமிநாசினி திரவம் வசதி ஏற்படுத்தாத உரிமையாளர்களுக்கு அபராதம் | கடைகளை மூடி சீல் வைத்தல் அல்லது இரண்டும் சேர்ந்த அபராதம் |
| iv) | பேரிடர் மேலாண்மை சட்டத்தின்கீழ் அவ்வப்போது அரசால் தெரிவிக்கப்படும் விதிமுறைகளை மீறும் இதர நிகழ்வுகள் அனைத்தும் | ரூ.100/– முதல் ரூ.10000 வரை அல்லது கடைகளை மூடி சீல் வைத்தல் அல்லது இரண்டும் சேர்ந்த அபராதம் |

அரசு தெரிவிக்கும் விபரப்படி பொதுசுகாதார தொற்றுநோய் பரவுதல் தடுக்கும் நடவடிக்கைகளை மீறிய வகைக்கும் மேற்கண்ட அபராதத்தொகையை கட்டாத தனிநபர் மற்றும் அனைத்து வகை கட்டிட உரிமையாளர்கள் மீதும் 1897ம் ஆண்டு தொற்றுநோய் சட்டம், 2005ம் ஆண்டு பேரிடர் மேலாண்மை சட்டம் பிரிவு 51 முதல் 60, தமிழ்நாடு பொதுசுகாதார சட்டம் 1939 மற்றும் 1860–ம் ஆண்டு இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 188ன்கீழ் காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கவும், நோய்தொற்று பரவுதலை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது மேலும் தற்போது பேரிடர்மேலாண்மை தடுப்பு நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ள மன்ற அனுமதி பெற்று பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட விதிமுறைகளை மீறிய வகைக்கு அபராதத்தொகை வசூல் செய்து உடனடியாக விதிகளை நடைமுறைப்படுத்துவதையும், மேற்கண்ட தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகளை இந்நகராட்சிப்பகுதியில் மேற்கொள்ளவும், மற்றும் விதிமுறைகளை மீறுபவர்களிடம் அபராத கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்தல் மற்றும் அவற்றின் சட்டரீதியான தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நகராட்சி அலுவலர்க்கு அனுமதி அளித்து அங்கீகாரம் வழங்கிடவும், தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.566/2020/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

நாள் – **30.04.2020.**

ஒ.ம்/–பீ.முகைதீன்அப்துல்காதர்
தனிஅதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.